வதற்கு நேரடியாக ஏலம் விடுவதை ரத்து செய்துவிட்டு டெண்டர் முறையை மட்டும் அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த டெண்டர் முறையையும் நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்வதைப்போல, பொது ஏலத்திலும் விடுகிறோம். டெண்டர் முறையையும் நாம் பின்பற்றுகிறோம். ஆக இரண்டும் சேர்ந்து அந்த முறைகளிலேதான் நாம் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இப்போது 5 லட்சம் ஏக்கர் என்று சொன்னார்கள். இல்லை. 5 ஆயிரம் ஹெக்டேர். 5 லட்சம் ஏக்கருக்கு எங்கே செல்வது? இருக்காது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், வனப்பரப்பே, இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளை நாம் ஒப்பிட்டுப்பார்க்கிற போது 17.5 சதவிகிதம் தான் இருக்கிறது. குறைந்த வனப் பரப்புகள் தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல போன ஆண்டு 1991—92-ல், 45 லட்சம் ரூபாய் அரசுக்கு செலுத்திய வரிப் போக லாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டு அரசுக்கு, $3\frac{1}{2}$ கோடி ரூபாய் லாபம் ஈட்டுகிற நேரத்தில், வரி போக ரூ. 52 லட்சம் என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண் 508. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

508—

கைத்தறி நெசவுத்தறிகளை பழுதுபார்க்க அரசு உதவி,

*13491—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவுத்தறிகளை பழுதுபார்க்க அரசே உதவி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத்தறிகளை பழுது பார்க்க நிதி உதவி ஏதும் செய்வது இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மழைக் காலங்களில் நூல்களில் பெரும்பகுதி பாதிக்கப்படுகிறது. மழை பெய்கின்றபோது, அந்த தறிப்பள்ளத்தில் தண்ணீர் நின்று அந்த தறிகள் யாவும் கெட்டுப் போகின்றன. அந்த 4 மாதம் மழைக்காலங்களில் நெசவாளர்கள் சாப்பாட்டுக்கூட சிரமப்படுகின்ற சூழ்நிலை மிகப்பெரிய நஷ்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த கைத்தறிக்கு என்றே தனியார் கூட்டுறவு சங்கம் அந்த பகுதியிலே அமைத்து, அந்தந்தப் பகுதியிலே அமைத்து அந்த தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன். இதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தறிகளைப் பழுது பார்க்கும் எண்ணம் இல்லை. ஆனால் நவீனப்படுத்துவதற்காகவும், கைத்தறிகளை ஜெக்கார்ட் தறிகளாக விநியோகம் தருவதற்காகவும், கைத்தறி உபகரணங்களை வழங்குவதற்காகவும் திட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத்தறிகள் அமைக்க முதலீடுகள் அதிகமாக ஆகிறது. பழுது பட்டால் சரிசெய்வதற்கு கூடுதல் செலவு ஆகிறது. பொதுவாக நெசவாளர்களைப் பாதுகாப்பதில் நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதன்மையான அரசாக விளங்குகின்ற நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் சார்பில் முழுவதும் அல்லது 50 சதவிகிதம் பங்கு தொகை செலுத்தி நெசவாளர்களுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு முறையை அறிமுகம் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கான குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தக்க பதில் தரப்படும்.

[1993 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நெசவுத் தொழிலினுடைய நலனை முன்னிட்டு நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நெசவாளர்களுக்காக கைத்தறி கூட்டுறவு நெசவு சங்கங்களை கடன் உதவியுடன் அமைத்து கொடுக்கின்றது. அந்த கடன் உதவியுடன் அமைக்கும் அந்த நேரத்திலே கைத்தறி நெசவினுடைய உதிரிபாகங்கள் மழைக் காலங்களிலே மிகவும் சிரமமான முறையிலே உற்பத்தி பண்ண முடியாத அளவுக்கு பழுதடைந்து விடுகிறது. கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் கொடுக்கின்ற நம்முடைய கூட்டுறவுத் துறை, நெசவுத் துறை இந்தமாதிரி ஒரு கஷ்டமான காலங்களில் உதிரிப் பாகங்களை வாங்குவதற்கோ அல்லது பழுது அடைந்த உதிரி பாகங்களுக்கு நிதியுதவி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேன். கடந்த ஆண்டுகூட உபகரணங்கள் 5,496 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய ஆண்டு 8,169 தறி உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. தறி உபகரணங்கள், ஜாக்காடு, விழுது, அச்சு போன்றவைகள் வழங்கப்படடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 509, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

509—

குப்பநத்தம் அணைக்கட்டு கட்டுமானப் பணி.

*9786— டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் 'குப்பநத்தம் அணைக்கட்டு' கட்டுமானப் பணிக்கான நிர்வாக ஒப்பளிப்பு அரசுக்கு வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தை செயல்படுத்தும் செயற் றிப்பு அரசிடம் உள்ளதா ?